மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 83 | 15.06.2023 (வியாழக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## குருந்தூர்மலை காணிகளை தமிழருக்கு வழங்குவது பேராபத்து!!!
### ரணிலுக்கு சென்றது கடிதம்



வரலாற்றுச் சிறப்புமிக்க குருந்தி அல்லது குருந்தூர் மலை விகாரைக்கு சொந்தமில்லாத சுற்றுப்புறக் காணிகளை தமிழ்மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு அதிபர் ரணில் வழங்கிய உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொல்பொருள் ஆய்வாளர் வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த

பக்கம் 5

## வடகிழக்கில் பாரிய இராணுவப் பட்டாளங்களோடு வலம்வரும் அமைச்சர் விதுரவை பதவி விலக்க வேண்டும்..!
## சுமந்திரன் எம்.பி திட்டவட்டம்!!



வடகிழக்கில் பாரிய இராணுவப் பட்டாளங்களோடு வலம்வரும் அமைச்சர் விதுரவை பதவி விலக்க வேண்டும்..! சமய அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடக்கு கிழக்குக்கு பாரிய இராணுவப் பட்டாளங்களோடு சென்று வருகிறார். அவருடைய பணிப்புரையின் கீழ்தான் சட்டவிரோத காணி அபகரிப்புகள் இடம்பெற்றுவருகிறன. அதனால் விதுர விக்ரமநாயக்கவை ஜனாதிபதி பதவி விலக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின்

பக்கம் 5

## ஆக்கிரமிப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்: திலீபன் ஆவேசம்!!



பக்கம் 5

"ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்றால் அதை எனக்கு அறியத்தரும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கை எடுப்பேன்" என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார். வவுனியா நகரத்தில் உள்ள சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (14.06.2023) இடம்பெற்ற கலந்துரையாடலின பின்னர்

## சட்டவிரோத கைதுகள் அனைத்தும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எடுத்துக் காட்டுகிறது! : சுகாஷ் காட்டம்!!



பக்கம் 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராக, ஜனநாயக ரீதியில் போராடிய செயற்பாட்டாளர்களான எங்கள் மீது, சட்டத்துக்கு புறம்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.
குறித்த வழக்கு நேற்று நீதிமன்றத்திற்கு எடுத்துக்

## தொல்பொருள் திணைக்களம்
### பௌத்தத்திற்கு மட்டும் சொந்தமல்ல! அது இன, மதங்களுக்கு அப்பாற்பட்டது..!

தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்திற்கு மட்டும் சொந்தமான விடயமல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையை



பக்கம் 5



பக்கம் 5

## பிரித்தானியாவில் தமிழர் தாயகத்தில் தொடரும் இனவழிப்புக்கு எதிரான மாநாடு

தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட வகையில், கட்டமைக்கப்பட்டு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இனவழிப்புக்கு நீதி கோரியும் அதனை தடுத்து நிறுத்த கோரியும், பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தமிழர் தரப்பினர் மாநாடு ஒன்றினை நடத்தியுள்ளனர்.
நேற்று (14.06.2023) மாலை 4.30 தொடக்கம் பிரித்தானியா நாடாளுமன்ற வளாகத்தில்

## அரசைக் கவிழ்க்க ஒருபோதும் இடமளியேன்: ரணில் திட்டவட்டம்!



மொட்டுக் கட்சிக்கும் தனக்கும் இடையிலான உறவில் விரிசல் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று அண்மைக்காலமாக தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

பக்கம் 5

## இலங்கையில் பொலிஸ் நிலையங்களில் அதிகரிக்கும் மரணங்கள்! கடும் நடவடிக்கை வேண்டும்! : சட்டத்தரணிகள் சங்கம்

இலங்கையில் பொலிஸ் நிலையங்களில் மரணங்கள் அதிகரிப்பது குறித்தும் நாட்டில் பரவலாக குற்றச்செயல்கள் அதிகரிப்பது குறித்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

பக்கம் 5

தேசியம் www.thesiyamnews.com THESIYAM தேசியம்

# யாழ் எம்.பி வெ. யோகேஸ்வரன் : இலங்கை அரசின் தமிழ் இனஅழிப்பை பாராளுமன்றில் சாட்சிப்படுத்திய உரை !



**அரசின் தமிழ் இன சுத்திகரிப்பு :**

1981 ஜீனில் அரச வன்முறையாளர்களின் கொலையில் இருந்து தப்பிய ஒரு எம்பியின் கதையை இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டாக, சர்வதேசத்திற்கு பறைசாற்றும் வண்ணம் “அரசின் தமிழ் இன சுத்திகரிப்பு” எனும் தலைப்பில் வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரை உலகெங்கும் தமிழரின் உரிமை போராட்டத்தை வெளிப்படுத்திய தாகும்.

“இன்று என் குரல் மட்டும் என்னுடையது. ஆனால் என் உடைகள் அனைத்தும் கடன் வாங்கப்பட்டவை. நான் அணிந்திருக்கும் வேட்டி திருகோணமலை உறுப்பினரின் பரிசு. மேலாடை பனியன் கடன் வாங்கப்பட்டது. அதன் கீழ் நான் அணிந்திருக்கும் உள்ளாடை என் தந்தையினுடையது. எனவே, நான் ஆரம்பத்தில் சொன்னது போல் என் குரல் மட்டும் என்னுடையது” என்று அவர் கூறிய வார்த்தைகள் அரச வன்முறையை உலகிற்கு தெளிவாக்கிய சான்றாகும்.

சர்வதேசத்திற்கு தமிழர் உரிமைப் போராட்டத்தை பறைசாற்றிய வெற்றிவேலு யோகேஸ்வரனின் நினைவு தினம் ஜீலை 13ஆகும்.

துன்பியல் நிகழ்வாக 1989 ஜீலை 13 இல் அவரை இழந்த துயர நிகழ்வானது ஈழத் தமிழர்க்கு ஈடு செய்யப்பட முடியாத இழப்பாகும்.

**கொடுங்கோல் ஆட்சி**

தமிழர்களின் உரிமைக்காக உரத்துக் குரல் கொடுத்த யோகேஸ்வரன் ஜூன் 9, 1981 அன்று இலங்கை பாராளுமன்றத்தில் கூறியது போல், இந்த அழகிய தீவின் இரு தேசங்களும் கற்க வேண்டிய பாடங்கள் பல உண்டு. ஒரு தேசம் கசப்பாக கற்கவில்லை, மற்றொன்று கசப்பாக கற்றுக்கொண்டுள்ளது. தமிழ்த் தேசியத்தைப் பொறுத்தமட்டில், தமிழ்த் தேசம் சரியாகப் பாடம் கற்றிருக்கிறது என்பதை அரச வன்முறையில் இருந்து காணக் கூடியதாக உள்ளது. இன்று நான் ஒன்றும் இல்லாமல் இருக்கிறேன். எனக்குள் துடிக்கும் இதயத்தைத் தவிர எனக்கென்று சொந்தமாக எந்த உடைமைகள் எதுவும் இல்லை.

இந்த கொடுங்கோன்மை, இந்த கொடுங்கோல் ஆட்சியிலிருந்து என் மக்களை விடுவிக்க நான் எப்போதும் உறுதியாக இருக்கிறேன், இப்போதும் உறுதியாக இருக்கிறேன். நான் அதை பற்றி எப்போதும் விட இப்போது மிக்க உறுதியாக இருக்கிறேன்.

**1981 யாழ் நகரமும், பொது நூலகம் எரிப்பும் :**

1981 ஜீனில் யாழ்ப்பாண நகர எரிப்பும், பொது நூலகம் எரிப்பு என்பது இலங்கை இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய கறை படிந்த நிகழ்வாகும். இந்நிகழ்வு 1981 ஆம் ஆண்டு சூன் 1 ஆம் தேதி இரவு சிங்கள அரச வன்முறைக் குழுவொன்றால் நடந்தது. 1981 மே 31 இரவு ஆரம்பமான இவ்வன்முறைகளின் போது யாழ்ப்பாண நகரில் உள்ள முக்கிய சந்தை, வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணப் பொது நூலகம், ஆகியன முற்றாக எரியூட்டப்பட்டன. இந் நிகழ்வு 20ம் நூற்றாண்டின் இன கலாச்சார அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது.

இவ்வழிப்பு நேர்ந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பொது நூலகம் கிட்டத்தட்ட 97,000



அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்தது. இந்த நூலகஎரிப்பு வன்கும்பலில் மூல கர்த்தாக்களாக இலங்கையின் அமைச்சர் காமினி திசாநாயக்கா, சிறில் மத்தியூ உட்பட வேறு பல அப்போதைய சிங்கள அரசியல் தலைவர்கள் அடங்கியிருந்தனர்.

நூலகம் எரிக்கப்பட்டது ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் அழியாக் காயம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரம் ஊட்டியது.

1981 சூன் 1 இல் சிங்களக் காவல்துறை, மற்றும் கும்பலால் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்ட போது யோகேஸ்வரனின் இருப்பிடமும் எரிக்கப்பட்டது. யோகேஸ்வரனும் அவரது மனைவியும் பின் சுவரால் குதித்து வெளியேறி உயிர்தப்பினர்.

இக்கொடுமைகளை விவரித்து ஜூன் 9, 1981 அன்று இலங்கை பாராளுமன்றத்தில் ஆவேசமாக யாழ்ப்பாணத்திற்கான எம்.பி. திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரை வரலாற்று சிறப்பு வாய்ந்ததாகும்

**என் கதையின் முடிவு :**

எந்த நாகரீக நாட்டிலும் இல்லாத வகையில் நிராயுதபாணியான மக்கள் மீது, கொடூர வன்முறையை அப்பாவி மக்கள் மீது உங்கள் அரசாங்கமும்,அரசாங்கத்தின் படைகளும் கட்டவிழுத்துவிட்டீர்கள். என்னுடைய தனிப்பட்ட பார்வை என்னவென்றால், நான் வாழ வேண்டும் என்று கடவுள் விரும்பினார், அதிசயமாக நான் தப்பித்தேன். அன்று நான் ஒழிக்கொண்டிருந்தபோது என் மனைவியிடம், "இதுதான் என் கதையின் முடிவு" என்று சொன்னேன். ஆனால் இது கதையின் முடிவாக இருக்கக் கூடாது என்று கடவுள் விரும்பியுள்ளார் போல், ஒருவேளை, அவர் என் உடைகள் அனைத்தையும் எரித்திருக்கலாம், அவர் என் வீட்டை எரித்திருக்கலாம். எனக்கு உலகில் வேறு சொத்துக்கள் இல்லை, சொந்தமாக எதுவும் இல்லை. ஒருவேளை, அவர் என்னிடம் சொல்லியிருக்கலாம். "உங்கள் மக்களுக்கான சுதந்திரத்தை நீங்கள் சொற்பொழிவாகப் பேசுகிறீர்கள், ஆனால் சில நேரங்களில் நீங்கள் மிகவும் ஆடம்பரமாக உடை அணிவீர்கள் அதைச் செய்யாதீர்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஆடம்பரமாக வாழ்கிறீர்கள் அதைச் செய்யாதீர்கள்." என்ற அந்தப் பாடங்களைக் கற்றுக்கொண்டேன்.

31-ம் தேதி இரவு நான் உயிர் பிழைப்பேன்

> **“தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினரான வெற்றிவேலு யோகேஸ்வரன் ஜூன் 9, 1981 அன்று இலங்கை பாராளுமன்றத்தில் ஆவேசமாக ஆற்றிய உரையானது, ஈழப் போராட்டத்தை உலகெங்கும் பறை சாற்றிய வரலாற்று சிறப்பு வாய்ந்ததாகும்.”**

என்று எதிர்பார்க்கவே இல்லை. அதேவேளை என் மனைவியும் உயிர் பிழைப்பார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இன்று இங்கு நிற்கும் போது நான் சில சமயங்களில் எனது சொந்த இரங்கல் குறிப்பில் பங்கேற்கிறேனா என்று வியப்படைகிறேன்.

என் வீட்டின் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலைப் பற்றி மட்டும் சொல்கிறேன். ஒரு பாராளுமன்றப் பிரதிநிதி தனது மக்களுடன் வாழ்ந்து, தான் நேசித்த மக்களிடையே வாழ்ந்தவரை மறைந்து, வீடு வீடாக ஒளிந்து கொள்ள வேண்டிய ஒரு கொடூரமானநிகழ்வை யார் செயதிருப்பர் ?இது அரசின் செயலாக இருக்க வேண்டும் ??

**தீப்பிழம்பாக யாழ்நகர் :**

என் வீட்டில் இருந்து பார்க்கையில் நகரப்பகுதியில் இருந்து தீப்பிழம்புகளை பார்க்க முடிந்தது. உடனே என் மனைவி என்னிடம், “எங்கள் வீட்டைத் தாக்குவார்கள் என்று நினைக்கிறேன்” என்றார். நிச்சயமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினராகிய நான் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடன் வாழ்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்பதனால் அவர்கள் வந்து கூச்சலிடலாம் ஆனால் வீட்டினுள் நுழையமாட்டார்கள் என்றே நினைத்தேன். பின்னர் மாவட்ட அமைச்சரை தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர் அங்கு இல்லை. நான் அவருடைய செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “போலீசார் ஊரின் சில பகுதிகளை எரிக்கிறார்கள்” என்றேன்.

அதன்பின் நான் யாழ்ப்பாணம் ஜி.ஏ.வை தொடர்பு கொள்ள முயற்சித்தேன், ஆனால் என்னால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

எனது வீட்டிற்கு எதிரே ஒரு முக்கியமான சந்தி உள்ளது. பருத்தித்துறைவீதி, மருத்துவமனை சாலை சந்திப்பு. சந்திப்பிலிருந்து பலத்த சத்தம் கேட்டது. எங்கள் வீட்டை கண்டிப்பாக தாக்குவார்கள் என்று என் மனைவி என்னிடம் கூறினார். நான், "இல்லை. அவர்கள் கூச்சலிட்டுப் போய்விடலாம். நான் பிரதமர் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சரிடம் பேசி என்ன நடக்கிறது என்பதைச் சொல்ல நான் முயன்றேன்.

**குடிபோதையில் படையினர் :**

நாம் தப்பி போக வேண்டும் என்பதில் மனைவி பிடிவாதமாக இருந்தாள், ஆனால் நான் போகவில்லை. என் அலுவலகக் கதவைத் திறந்தேன். அலுவலக ஜன்னல் வழியே என் முன் வாயில் தெரிந்தது. 50 முதல் 100 பேர் வரை, சிலர் காக்கி சீருடையில், சிலர் வெள்ளை பனியன் மற்றும் காக்கி காற்சட்டைகளுடன் , சிலர் சரமாரியாக, சிலர் தடிகளுடன், சிலர் வாள்களுடன் மற்றும் சிலர் துப்பாக்கிகளுடன், கேட் அருகே நிற்பதைக் கண்டேன்.

உண்மையில் நிலைமை என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் கேட்டை வலுக்கட்டாயமாக திறக்க முயன்றனர்.

அப்போது கேட் பூட்டப்பட்டிருந்தது. அவர்கள் பயங்கர போதையில் இருந்தனர். அவர்கள் என் வீட்டிற்கு வருவதற்கு முன்பு வெளிநாட்டு மதுபானக் கடைகளை சூறையாடி விஸ்கி மற்றும் பிராந்தி ஆகியவற்றை உட்கொண்டதை அறியக் கூடியதாக இருந்தது.

அவர்களால் கேட்டை திறக்க முடியவில்லை. அவர்கள் கேட்டைத் தள்ளினார்கள், திறக்கவில்லை. ஒரு அதிகாரி பூட்டில் சுடுவதை நான் பார்த்தேன். பின்னர் நான் என் மனைவியிடம் இன்னும் அங்கே காத்திருப்பது பாதுகாப்பானது அல்ல என்று சொன்னேன், நாங்கள் இருவரும் ஓடினோம். இரண்டு மூன்று சுவர்களைத் தாண்டி குதித்து பாதுகாப்பான இடத்திற்கு வந்தோம். பின்னர் கேட்டை திறந்தனர். அனைத்து கதவுகளிலும் எதையாவது ஊற்றி தீ வைத்தனர். நான் சுவர் மீது ஏறி தப்பித்தேன். என் மனைவியும் சுவர் ஏறி ஏறினாள். அதன் பிறகு நான் அவளை தவறவிட்டேன்.

நான் என் பக்கத்து வீட்டில் மறைந்திருந்த நாற்பத்தைந்து நிமிடங்களுக்குப் பிறகு, என் மனைவி எங்கே இருக்கிறாள் என்று பார்க்க விரும்பினேன். பனியன் மற்றும் காக்கி காற்சட்டை அணிந்த போலீஸ் அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் என்னைக் கையால் பிடித்துக் கொண்டார், ஆனால் அவர் போதையில் இருந்ததால், பெரும்பாலான படையினர் போதையில் இருந்தார்கள். இதனால் நான் என்னை பொலிசாரிடமிருந்து துண்டித்துக்கொண்டு மீண்டும் சுவரின் மேல் எகிறி தப்பிக்க முடிந்தது.

3 அல்லது 4 மணி வரை என் மனைவி எங்கே என்று யாருக்கும் தெரியாது. பின்னர் அக்கம் பக்கத்தில் சென்று தேடி கண்டுபிடித்தோம்.

அரச படையினர் என் காருக்கும் தீ வைத்தனர். எனது வளாகத்தில் ஜீப் கேரேஜில் பத்திரமாக நிறுத்தப்பட்டு, கேரேஜ் பூட்டப்பட்டிருந்தது. கேரேஜில் இருந்து ஜீப்பை தள்ளிவிட்டு, ஜீப்பை இரும்பு கம்பியால் அடித்து, சாலையில் தள்ளி, பெட்ரோல் ஊற்றி தீ வைத்தனர். ஜீப் எரிந்து நாசமானது. அங்கே என் நண்பர் ஒருவர் நிறுத்தியிருந்த பியூஜியோ 404 கார் இருந்தது. அந்த காருக்கும் தீ வைத்தனர். அவர்கள் சில நகைகளைக் கொள்ளையடித்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன், ஆனால் அனைத்து நகைகளும் எரிந்தன அல்லது காணவில்லை நான் இதுவரை ஒரு பொருளையும் பார்க்கவில்லை. என்னிடம் இருந்த தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் அனைத்தும் முற்றிலும் எரிந்து நாசமானது.

உண்மையாகவே, என் மனைவி அணிந்திருந்த கவுனையும், அப்போது அணிந்திருந்த மஞ்சள் நிறச் சேலை மட்டும் இப்போது என்னுடம் உள்ளன.

**வயதான பெற்றோர் மீது துன்புறுத்தல்:**

எனது சொந்த மக்கள் மத்தியில் நான் மறைமுகமாக வாழ வேண்டியிருந்தது. நான் வேறு இடத்தில் சென்று தங்கினேன். அன்று மாலை 5 மணிக்கு சில இராணுவ வீரர்கள் என் தந்தையின் வீட்டிற்குச் சென்று நான் எங்கே இருக்கிறேன் என்பதை அறிய விரும்பினர். அவர் அவர்களிடம் கூறினார்: "அவர் எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் எனக்கு ஓரிரு நாள் அவகாசம் கொடுங்கள் எனக்கூறினார்.

இதன்பின் மதியம் 2 மணியளவில் சுமார் 7 அல்லது 8 பொலிஸ் அதிகாரிகள் வந்து எனது தந்தையின் வீட்டின் சுவர்கள் மேல் பாய்ந்து என் அப்பா அம்மா இருவரையும் பயமுறுத்தினார்கள். என் பெற்றோர் மிகவும் வயதானவர்கள். இந்த போலீஸ்காரர்கள் சுவர்களை, கதவைத் தட்டி, “வீட்டைத் தேடலாமா?” என்று கேட்டார்கள். எனக்கு பாதுகாப்பு அளிக்க வந்தவர்கள் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு படுக்கையின் கீழும் சோதனையிட்டனர்.

அரச படையினர் என் தந்தை வீட்டில் சென்று அவர்களை துன்புறுத்தினார்கள். நான் அரசியலில் நுழைந்தமைக்காக முதுமை வயதில் என் பெற்றோர் துன்புறுத்தப்படுவதற்கு இடம் கொடுத்ததற்காக நான் வருந்துகிறேன். ஆனால் நமக்கு சில கடமைகள் மற்றும் உரிமைகள் உள்ளன. நாமும் நம் மக்களுக்கு நம்

# யாழ் எம்.பி வெ. யோகேஸ்வரன் : இலங்கை அரசின் தமிழ் இனஅழிப்பை பாராளுமன்றில் சாட்சிப்படுத்திய உரை !



கடமையைச் செய்ய வேண்டியுள்ளோம்.

**என் மாமனார் மாரடைப்பால் மரணம் :**

நான் முன்பே சொன்னது போல், நான் தப்பித்தது உண்மையிலேயே ஒரு அதிசயம். என் தந்தையிடம் சென்று தொல்லை கொடுத்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில் எனது மாமனார் மாரடைப்பால் இறந்துவிட்டார். எமக்கு நடந்த கொடுமையை அறிந்தமையால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட காரணமாக அமைந்தது. அச்சுறுத்தல் காரணமாக அவரது மரண அறிவிப்பை நாளிதழ்கள் கூட வெளியிடவில்லை. எனது மாமனாரின் உறவினர்கள் அவரது மரணம் குறித்து வானொலி அறிவிப்பையையும் செய்யவில்லை.

**அரச வன்முறை:**

இந்த அரசாங்கம் நிராயுதபாணியான, அப்பாவி மக்கள் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. அயர்லாந்தில் பிரிட்டிஷ் வீரர்கள் மீது தாக்குதல்கள் மற்றும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். ஆனால் அவர்கள் என்றமே பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை எரிக்கிறார்களா அல்லது சாதாரண மக்களின் வீடுகளை எரிக்கிறார்களா?

அரசின் கடமை வன்முறையாளர்களை கட்டுப்படுத்துவது. படையினர் ஒழுக்கமான சக்தியாக இருக்க வேண்டும். காவல் துறை ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

எனது வீட்டின் மீதான தாக்குதல் தொடர்பான சம்பவங்களை மட்டுமே உங்கள் கூறினேன். பதிவு செய்ய வேண்டிய சம்பவங்கள் பல உள்ளன.

**கடவுளுக்கு அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்**

இந்த அரசாங்கம் என் சொத்துக்களுக்கும் எனக்கும் சொல்லொணாச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அது தோல்வியடைந்தது. அரசாங்கம் என்மேல் என்ன எதிர்கால திட்டங்களை வைத்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் என்ன திட்டங்களை வைத்திருந்தாலும், மேலே உள்ள கடவுள் அத்தகைய திட்டங்களை முறியடிப்பார் என்று நான் நினைக்கிறேன். அதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. அனைத்து சோதனைகள் மற்றும் இன்னல்கள் இருந்தபோதிலும், நாங்கள் கடவுளுக்கு அர்ப்பணிப்புடன் இருக்கிறோம், அதை நாங்கள் உறுதியுடனும் பின்பற்றுவோம்.

தமிழ்த் தேசிய உரிமைகளுக்காக நீண்ட காலம் உழைத்த அவர், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் நாடு திரும்பினார். முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினரான வெற்றிவேலு யோகேஸ்வரன் தமிழ் இளைஞர்கள், மற்றும் பொது மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தவர். அக்காலத்தில் யாழ் எம்.பியாக தமிழ் இளைஞர்களின் பலத்த ஆதரவை யோகேஸ்வரன் பெற்றிருந்தார்.

துன்பியல் நிகழ்வாக 1989 ஜீலை 13 இல் அவரை இழந்த துயர நிகழ்வானது ஈழத் தமிழர்க்கு ஈடு செய்யப்பட முடியாத இழப்பாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# 5,500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் : கல்வி அமைச்சு தீர்மானம்!!



நாடளாவிய ரீதியில் 5,500 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், மொழி, புவியியல் மற்றும் வர்த்தகம் போன்ற பாடங்களுடன் தொடர்புடைய மூன்று மொழிகளிலிருந்தும் இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நாடளாவிய 35 வயதை பூர்த்தி செய்யாத 5,500 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், மொழி, புவியியல் மற்றும் வர்த்தகம் போன்ற பாடங்களுடன் தொடர்புடைய மூன்று மொழிகளிலிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் 7,500 பயிற்சி பெற்ற கல்வியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்று புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் பௌதீக வளங்களையும், மனித வளங்களையும் பூர்த்தி செய்வதன் மூலம் மாத்திரம் கல்வியை அபிவிருத்தி செய்ய முடியாது.

அதற்கு மாணவர்களின் ஒழுக்கம் இன்றியமையாதது. சமூகத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் மோசமான நடத்தைகள் பாடசாலைகளுக்குள் நுழைவதைத் தடுக்க வேண்டும்.

புதிய தலைமுறையினரிடையே ஒழுக்கமற்ற நடத்தைகளை, மத நோக்குநிலை மற்றும் புரிதலில் மாற்றுவதன் மூலம் இவற்றை இல்லாமல் செய்யலாம்.

பாடசாலை நிர்வாகத்திற்குள் அதிபருக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் முறையற்ற தலையீடுகள் பொருத்தமற்றது.

இவ்வாறான விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்த கோரி எதிர்ப்புப் பேரணி



கிளிநொச்சியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்த கோரி எதிர்ப்புப் பேரணியொன்று புதன்கிழமை (14) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் கணவனால் கடுமையாக தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்தியசாலை மாற்றப்பட்டு, நீண்ட நாள் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இதனையடுத்து, கிளிநொச்சி, கோனாவில் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், துன்புறுத்தல்கள் அதிகளவில் காணப்படுவதை கருத்திற் கொண்டு, சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையிலும் சில பெண்கள் அமைப்புக்களால் நேற்று பகல் எதிர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்ட எதிர்ப்பு பேரணியானது கோனாவில், சந்திரமுகி சந்தியில் இருந்து ஆரம்பமாகி, கோனாவில் பாடசாலை வழியாக சென்று, கோனாவில் பொது விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெற்றது.

இப்பேரணியில் "பெண்களுக்கான அநீதி வேண்டாம்", "போதை பிரியர்களே பெண் உனக்கு வேண்டாம்", "கொடூரமான குடும்ப வன்முறை இனி எமக்கு வேண்டாம்" போன்ற சுலோ கங்களை தாங்கியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் பெரும் சோகம் விளையாடிக்கொண்டிருந்தபோது முடிந்த விதி



முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் வீட்டின் இரும்புப் படலை, சிறுவன் மீது வீழ்ந்ததில் அச்சிறுவன் உயிரிழந்த சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை (14) காலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கேப்பாபிலவு பகுதியினை சேர்ந்த மூன்று அகவை நிரம்பில ஆதவன் லிதுசிகன் என்ற சிறுவன் வீட்டு படலையில் விளையாடிக் கொண்டிருந்த வேளை கேற் (இரும்பு படலை) சிறுவன் மீது வீழ்ந்து சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சிறுவனின் உடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டு பிரோத பரிசோதனைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சிறுவனின் உயிரிழப்பு கேப்பாபிலவு கிராமத்தில் பெரும்சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

# யாழ். தீவகத்திலுள்ள பாடசாலை மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர்!



யாழ்ப்பாணம் தீவகத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் (13.06. 2023) ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தரம் 7 இல் கல்வி கற்கும் 12 வயதான மாணவிக்கே ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்தார் என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாணவி தன் தாயாரிடம் முறையிட்டுள்ளார்.

இந்நிலையில் பாடசாலை அதிபரிடம் முறையிடப்பட்ட போது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகின்றது.

இதையடுத்து பொலிஸாரிடம் முறையிடப்பட்ட போது ஆசிரியர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு, நேற்று முன்தினம் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

கைதான ஆசிரியர் ஏற்கனவே வலிகாமம் பகுதி பாடசாலையொன்றில் கல்வி கற்பிக்கும் போது சில மாணவிகளை பாலியல் கொடுமைக்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், மாணவிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வரவில்லை. இதையடுத்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அவர் மீளவும் ஆசிரியர் சேவையில் இணைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்திற்கு பெருமை தேடிக்கொடுத்த வினோஜ்குமார் உயரிய விருதுக்கு பரிந்துரை!!






அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைக் கிராமத்தில் பிறந்த இளம் விஞ்ஞானி சோ.வினோஜ்குமார் விருது வென்று சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச ரீதியாக விஞ்ஞான புத்தாக்கம் மற்றும் புலமைச் சொத்து ஆகியவற்றிற்கு சேவை செய்தவர்களுக்கான Romania அரசினால் வழங்கப்படும் உயரிய விருதுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

**Ministry of Research, Innovation & Digitalization, Romania** இணைந்து இரு வருடங்களாக **Zoom** ஊடாக புத்தாக்கம் மற்றும் புலமைச் சொத்து தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் மற்றும் சர்வதேச ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் நடுவராகவும் கலந்து கொண்டு பணியாற்றியமைக்காகவும் இவருக்கு இந்த விருதுக்கான பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான உயரிய விருதுகள் பலவற்றி பெற்று தாய் நாட்டுக்கும் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்த வினோஜ்குமாருக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்து வருகின்றன.

# யாழில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குங்கள்! :

## இராணுவ கட்டளைத் தளபதியிடம் அரச அதிபர் கோரிக்கை!!



யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெறும் சட்ட விரோத செயற்பாடுகள் குழு மோதல்கள், சட்ட விரோத போதை பொருள் கடத்தல் கால்நடைகள், மணல் கடத்தல் போன்றவற்றை தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிக அவசியம் என புதிதாக பதவியேற்றுள்ள யாழ் மாவட்ட இராணுவ கட்டளை தளபதியிடம் எடுத்துரைத்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஆ. சிவபாலசுந்தரம் தெரிவித்தார்

யாழ் மாவட்டம இராணுவ கட்டளை தளபதியாக புதிதாக பதவி யேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி புதன்கிழமை (14) யாழ் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார் இந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெறும் சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்பு மிக அவசியம் மேலும் காங்கேசன் துறைசீமெந்து கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ள நிலையில் சீமெந்து கூட்டுத்தாபனந்திற்கு சொந்தமான பொருட்கள் களவாடப்படுவதாக பல முறைப்பாடு கிடைத்துள்ளன எனவே இராணுவத்தினர் அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தினர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளது குறித்த காணிகளையும் விரைவில் அளவீடு செய்யும் நடவடிக்கையில் உரிய சம்பந்தப்பட்ட திணைக் களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இராணுவத்தினர் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும்.

மீள்குடியேறிய மக்களுக்கு இராணுவத்தினரால் 700றக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது அதேபோல் எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவ தான் கோரிக கை முன்வைத்ததாக அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் உள்ள வளங்களை பாதுகாக்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டம்









மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்கக் கோரி சூழல் பாதுகாப்பிற்கான கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (14) காலை 10.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்கு முன் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது இளைஞர், யுவதிகள், சூழல் பாதுகாப்பு குழுவினர், மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய பணியாளர் களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கவனயீர்ப்பு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர். குறித்த ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகம் முன் சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதப்பட்ட மகஜர் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளாரினால் வாசிக்கப்பட்டது. பின்னர் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்றினைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேலிடம் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், சர்வதேசம் COP27 மூலம் இயற்கையைப் பாதுகாப்பது மற்றும் காலநிலை மாற்றங்களை நிர்வகிப்பது குறித்து தனது தீவிர அக்கறை காட்டும் இக்காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வதும் அவசர தேவையாகும்.

முல்லை, மருதம், நெய்தல் நிலங்களையும், அழகிய நீர்நிலைகள், ஆறுகள் மற்றும் குளங்கள், மணல் திட்டுக்கள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் இயற்கை வனப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்டம் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு மிகவும் வளமான இடமாகும்.

“கறிராஸ்-வாழ்வுதயம் நிறுவனம் “இயற்கை வளங்களை பாதுகாப்போம்“ எனும் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒன்பது கிராமங்களில் செயல்படுத்தி வருகிறது. இயற்கை வளங்களை பாதுகாக்கும் முயற்சிகளில் சமூகத்தின் பங்கேற்பையும், ஈடுபாட்டையும், நிலைத்த தன்மையையும் உறுதி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு இலக்கு கிராமங்களிலும் சிறுவர், இளையோர், வளர்ந்தோர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அரச அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடனும், வழி காட்டல்களுடனும் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்கிராம மட்டத்திலான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்கள் சுரண்டல் செயற்பாடுகளின் முக்கிய மானவற்றை தங்களின் மேலான கவனத்திற்கு, தடுப்பு நடவடிக்கைகளுக்கும் கோடிட்டுக் காட்டுகின்றன:

**1. காற்றாலை திட்டம் – முதலாம் கட்டம்**

மன்னார் தீவில் ஏற்கனவே சுமார் 30 காற்றாலைகள் நிறுவப்பட்டு, மணல் அகழ்வோடு இணைக்கப்பட்டு வருகின்றன. இந்த சிறிய தீவில் ஆண்டுக்கு 380-400 புறா என்ற இலக்குடன் அதிக காற்றாலைகளை நிறுவுவதற்கான திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துவதற்கான சில அடிப்படை வேலைகள் நடந்து வருகின்றன. இத்திட்டத்தினால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், வெளிநாட்டுப் பறவைகள் வருகை குறைவு, மீன் உற்பத்தி குறைபாடு, மண் வளம் அகழ்வு செய்யப்படுவது பற்றியும் கருத்தில் கொண்டு பாதிப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**2. சட்டவிரோத மணல் அகழ்வு**

அருவி ஆறு ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் அளவுக்கு அதிகமாக ஆறு ஆழமாக்கப் பட்டுள்ளமையால் கடல் வெள்ளம் உயரும் போது ஆற்று நீருடன் உப்பு நீர் கலப்பதால் ஆற்றங்கரை கிராமங்களின் நிலத்தடி நீர் உவராக மாறியுள்ளது. ஆற்றங்கரைகளில் தோட்டம் செய்ய முடியாதபடி நீர் உருவாகியுள்ளது. குறிப்பாக மடுக்கரை மற்றும் தம்பனைக்குளம் கிராமங்களின் குடிநீர் கிணறுகள் உவராக மாறியுள்ளன. ஆற்று வித்தன்களில் உள்ள பெரிய மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டு விலங்குகள் பறவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

**3. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்**

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் கடல் வளம் பாரிய செல்வாக்கினைச் செலுத்துகின்றது. ஆனால், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக எமது கடல் வளமும், கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க சுற்றுச்சூழலில் உள்ள பவளப் பாறைகளும், ஏனைய இடங்களும் அடியோடு அழிக்கப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் எமது மக்கள் மீன்பிடித் தொழிலை இழப்பதற்கான குறி காட்டிகளாகவே இவை துலங்குகின்றன.

**4. காடழிப்பு**

மன்னார் மாவட்டம் உள்நாட்டு யுத்தத்திற்கு முன்பு பரந்த காடுகளை கொண்டிருந்தது. யுத்தம் நிறைவுற்று 2010ம் ஆண்டிற்கு பிற்பாடு பாரியளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. 2021ம் ஆண்டின் பிற்பாடு காட்டு வளமானது 210 ஹெக்டேயர் வனப் பரப்பை இழந்துள்ளது. கூகுள் எர்த் வரைபடத்தின் படி டிசம்பர் 2015க்குள் ஏறத்தாழ 2,208 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளது. முதிரை, பாலை, வீரை போன்ற பெரு மரங்களில் 70 வீதம் வரையானவை சட்டவிரோதமாக அழிக்கப் பட்டுள்ளதாக காட்டு இலாகாவின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

**5. கண்டல் தாவர அழிப்பு**

கண்டல் தாவரங்களின் வேர்கள் நண்டு, இறால், சிப்பி போன்ற பல்லுயிர்களின் பெருக்கத்திற்கான மையமாகும், இவற்றின் கிளைகள் பறவைகளின் தங்கு தளம் ஆகும். சிறு மீன்கள், பறவைகள், ஊர்வன மற்றும் ஏராளமான பிற வனவிலங்குகளுக்கும் நீரின் மேற்பரப்பிற்கு மேலேயும், கீழேயும் ஏராளமான உணவுகள் உருவாகும் தொழிற்பாட்டை இத்தாவரங்கள் மேற்கொள்கின்றன. துரதிஸ்ட விதமாக சட்டவிரோத மீன்பிடித்தல், விறகு மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக மாவட்டத்தில் உள்ள சதுப்பு நில தாவரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.

**6. வங்காலை பறவைகள் சரணாலயம்**

வங்காலை பறவைகள் சரணாலயம் வறண்ட மண்டல முள் புதர் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், கடல் - புல் படுக்கைகள், மணல் திட்டுகள், தடாகங்கள், அலை அடுக்குகள், சதுப்பு நிலங்கள், முதலியவற்றைக் கொண்ட அழகிய பிரதேசமாகும்.

இங்கு உள்நாட்டு பறவைகளும், வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்கின்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இவற்றைக் கண்டு களிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் எமது மாவட்டத்திற்கு வருகை தருதல் பொருளாதார வளர்ச்சிக்கான படிக்கல்லாகும்.

ஆனால், இந்த இடத்தின் அழகினையும். வரலாற்று முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை (பொலித்தீன்-பிளாஸ்ரிக்) சரணாலயத்தின் உள்ளே கொட்டுவது விலங்குகளுக்கும், பல்லுயிர் காப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலான செயற்பாடாகும்.

எனவே மேற்கூறிய பிரச்சனைகள் மற்றும் சுரண்டல்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கண்டு வேதனை அடைகிறோம். மன்னார் வளங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடகிழக்கில் பாரிய இராணு...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். யாழ். சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், கடந்த சில தினங்களாக தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் மானதுங்க ராஜினாமா செய்தமை தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி எங்களோடு நடாத்திய பேச்சு வார்த்தையிலும் கூட, அமைச்சரவை தீர்மானங்களை நிறைவேற்றுவதில் விருப்பம் இல்லாதவர் போல பேராசிரியர் மானதுங்க காட்டிக் கொண்டார்.

அது அமைச்சரவைக்கும் அவருக்குமுள்ள பிரச்சனை. எங்களுக்குள்ள பிரச்சனை, வடக்கு கிழக்கு வாழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு பற்றியது.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடக்கு கிழக்குக்கு பாரிய இராணுவப் பட்டாளங்களோடு சென்று வருகிறார்.

அவருடைய பணிப்புரையின் கீழ்தான் சட்டவிரோத காணி அபகரிப்புகள் இடம்பெற்று வருகிறன. அதனால் ஜனாதிபதியிடம் நாங்கள் கேட்பது விதுர விக்ரமநாயக்கவை பதவி விலக்க வேண்டும்.- என தெரிவித்தார் சுமந்திரன்.

## குருந்தூர்மலை காணிகளை...

தேரர் நேற்று முன்தினம் (13) அதிபருக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குருந்தி விகாரையை சூழவுள்ள காணிகள் இனவாதப் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கும் மக்களின் கைகளுக்குச் சென்றால் எதிர்காலத்தில் அந்தப் பிரதேசம் பாரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “

குருந்தி விகாரைக்குச் சொந்தமில்லாத காணியை பொதுமக்களுக்கு வழங்குமாறு அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிந்துகொண்டேன். குருந்தி விகாரையைச் சுற்றிலும் பல்வேறு புத்த மடாலயங்களின் இடிபாடுகள் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன.

எனவே, இந்த நிலங்களை தமிழருக்கு பகிர்ந்தளிப்பது ஏற்புடையதல்ல. மேலும், பௌத்த விகாரைக்கு அருகில் போராட்டங்களை ஆதரிக்கும் மக்களுக்கு காணி வழங்குவது ஏற்புடையதல்ல. இதன் மூலம் பௌத்த இடிபாடுகளுக்கு அருகில் போராட்டங்களை ஆதரிக்கும் குடியிருப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதும் அந்த நிலத்தை அரசு கொடுத்ததோ இல்லையோ வலுக்கட்டாயமாக அபகரித்து விட்டதாகவே தெரிகிறது. எனவே இந்த காணிகளின் உரிமையை மாற்றக்கூடாது எனவும் எதிர்காலத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடும் எனவும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத கைதுகள் அனை...

கொள்ளப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வழக்கில் ஆஜராகுவதற்காக நீதிமன்றிலே முற்பட்டிருந்தோம். மீண்டும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்க தவறியிருக்கின்ற காரணத்தினால் அடுத்த வழக்கிற்கு ஒரு திகதி இடப்பட்டுள்ளது.

இந்த கைதுகள் அனைத்தும் சிங்கள பௌத்த பேரினவாதத்துடைய, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய சட்டவிரோத கைதுகளுக்கு அஞ்சி, எங்களுடைய உரிமைப் போராட்டத்தை அடக்கலாம் என்று அரசோ அல்லது அரச இயந்திரங்களோ நினைக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது அவரது வருகைக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் உள்ளிட்ட 18 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கானது நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அடுத்த வழக்கானது 10.10.2023 அன்று திகதியிடப்பட்டுள்ளது.

## ஆக்கிரமிப்புக்களுக்கு முற்று...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வர்த்தக சங்கம், அங்காடி வியாபாரிகள், நகர சபை, பிரதேச சபை, அரச அதிகாரிகள் உட்பட அனைவரையும் இணைத்து கொண்டு வர்த்தகர்கள் எதிர்நோக்ககூடிய பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டிருந்தது.

## தொல்பொருள் திணைக்களம்...

இன்று சில அரசியல்வாதிகள் விமர்சித்து வருகிறார்கள். 2,500 வருட வரலாறு கொண்ட எமது நாட்டில், எங்கு தோண்டினாலும் புராதனச் சின்னங்கள் கிடைத்துக்கொண்டுதான் இருக்கும்.

மலசலகூடத்திற்காக குழியொன்றை தோண்டினால்கூட, இந்தப் பிரச்சினை ஏற்படலாம். தொல்பொருள் சின்னங்கள் காணப்படும் இடங்களை நாம் நிச்சயமாக பாதுகாக்க வேண்டும்.

அதேநேரம், தற்போது வாழும் மக்களையும் அது பாதிக்காத வகையில் எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும். சிங்கள- பௌத்த தொல்பொருள் மட்டும் இங்கு தொல்பொருட்களாக கருதிவிட முடியாது.

அது இன, மதங்களுக்கு அப்பாற்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவில் தமிழர் தாய...

இந்த மாநாடு இடம்பெற்றுள்ளது. சிறப்பாக தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழிச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், மற்றும் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய வி.எஸ்.எஸ். தனஞ்சேயன் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவில் செயற்பாட்டுக் கொண்டிருக்கும் தேசிய செயற்பாட்டு அமைப்புகளின் அனுசரணையுடன் Tamils for Conservative, Tamils for Labor அமைப்புகளின் ஏற்பாட்டில் இம் மாநாடு நடைபெற்றது .

இப் மாநாட்டில் Mr.Patrick Louise (Barrister for Human Rights) ஜனனி ஜனநாயகம் மனித உரிமைச் செயற்பாட்டாளர், பணிப்பாளர் Against Genocide ஆகியோர் சிறப்பு பேச்சாளர்களாக இணைந்து கொண்டனர்.

தொடர்ந்து மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஆகிய Mr John McDonald's MP, Mr Virendra Sharma MP, Lib Democratic Leader Sir Ed Davey MP, Ms Sarah Jones - (MP and Shadow Minister of State for Police and the Fire Service), Mr Sam Tarry MP, Mr Gareth Thomas MP - (Shadow Minister for International Trade) ஆகியோர் தமது கருத்துரைகளை வழங்கியதை தொடர்ந்து இனவழிப்புக்கான தீர்மானத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான முனைப்புகளில் ஈடுபடுவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துரைகளை தொடர்ந்து நன்றியுரையை செல்வன். கஜீவன் வழங்கியுள்ளார்.

தமிழரின் நீண்ட நெடிய விடுதலைப் பயணத்தின் ஓர் மைல் கல்லாக இம்மாநாடு அமைந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

## இலங்கையில் பொலிஸ் நிலை...

அரசாங்கம் தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் தங்கள் கடமையை நிறைவேற்ற தவறும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சட்டத்தின் ஆட்சியின் கீழ் நாகரீகசமூகமொன்றில் இடம்பெறக்கூடிய மிகமோசமான குற்றம் என கருதப்படும் பொலிஸ்நிலையங்களில் இடம்பெறும் மரணங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தக்கூடிய வழிகாட்டுதல்களை உருவாக்கவேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்களை பாதுகாப்பதற்காக குற்றச்செயல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை சட்டஅமுலாக்கல் அதிகாரிகள் அமுல்படுத்தவேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை சட்ட அமைப்பு முறையான விசாரணை மற்றும் தண்டனையை வழங்குவதற்கான விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது இது ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு அடிப்படையானது என தெரிவித்துள்ள இலங்கைசட்டத்தரணிகள் சங்கம் அத்தகைய செயல்முறைகளின் நம்பகதன்மையை வெளிப்படைதன்மையை உறுதியாக பாதுகாக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அரசைக் கவிழ்க்க ஒருபோதும்...

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் எனக்கும் இடையிலான உறவில் விரிசல் இல்லை. எதிர்க்கட்சிகள் பரப்புரை செய்வது போன்று இது மக்கள் ஆணை இல்லாத அரசு கிடையாது.

மக்கள் ஆணையுடன்தான் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் மாறியிருக்கின்றார்களே அன்றி இந்த அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணை மாறவில்லை. எனவே, இல்லாத ஒன்றை திரும்பத் திரும்ப மக்கள் மத்தியில் தெரிவித்து குழப்பத்தை ஏற்படுத்தி அரசைக் கவிழ்க்கும் எதிர்க்கட்சிகளின் நோக்கம் நிறைவேற நான் இடமளியேன். இது தேர்தல் காலம் அல்ல. எனினும், எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு அரசு தயார். ஆனால், தேர்தல் எப்போது இடம்பெறும் என்று இப்போது சொல்ல முடியாது." என தெவித்தார்.








**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

# அண்ணனுக்கு கடனாக கொடுத்த பணத்தை வாங்க வீட்டுக்கு சென்ற தம்பி மீது தாக்குதல் நடாத்திய இரு பெண்கள் உட்பட 4 பேர் கைது!!



மட்டக்களப்பு தலை நகர் பகுதியில் தனது அண்ணனுக்கு 17 வருடத்துக்கு முன்னர் கடனாக கொடுத்த பணத்தை கேட்டு வீட்டுக்கு சென்ற போது அவன் மீது அவனது சகோதரர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடாத்தியதில் அவர்படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவனது அண்ணன், அக்கா மற்றும் அக்காவின் கணவர் அவரது மகள் ஆகிய 4 பேரை நேற்று புதன்கிழமை (14) கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மட்டு கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் தனது காணியை கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் விற்று அந்த பணத்தில் 6 அரை இலட்சம் ரூபாவை மூத்த சகோதரனுக்கு கடனாக வழங்கிய நிலையில் மத்திய கிழக்கு நாட்டுக்க சென்று கடந்த 2 மாதங்களக்கு முன்னர் திரும்பி வந்துள்ளார்.

இந்த நிலையில் கொடுத்த கடனை கேட்டு சகோதரனின் வீட்டுக்கு சென்ற நிலையில் அவர் அங்கு இல்லாத நிலையில் அவர் சகோதரியின் வீட்டில் இருப்பதாக அறிந்த அவர் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை 6 மணியளில் சகோதரியின் வீட்டுக்கு சென்ற நிலையில் அங்கு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முறியதையடுத்து அவர் மீது அவரது சகோதரன் சகோதரி சகோதரியின் கணவர் அவர்களது மகள் சேர்ந்து தாக்குதல் நடாத்தியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் தாக்குதலை மேற்கொண்ட இரு பெண்கள் இரு ஆண்கள் உட்பட 4 பேரை கைது செய்துள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மட்டக்களப்பு அமிர்தகழியில் மின்சாரம் தாக்கியதில் இரு தச்சு தொழிலாளிகள் உயிரிழப்பு!



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுள்ள அமிர்தகழி பிரதேசத்தில் வீடு ஒன்றின் மேல் கூரையை திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தச்சு தொழிலாளர்கள் மீது மின்சார தாக்கியதில் இருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று புதன்கிழமை (14) பகல் 11 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ரொக்கி சைய்டே மற்றும் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானபிரகாசம் கோடிசன் ஆகியோர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் .

இது பற்றி தெரியவருவதாவது அமிர்தகழி பாடசாலை வீதியிலுள்ள வீட்டின் ஒருபகுதி கொங்கிறீற் இடுவதற்காக கூரையை ஒருபகுதில் சம்பவ தினமான நேற்று காலையில் 3 தச்சு தொழிலாளிகள் கழற்றி திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது பகல் 11 மணியளவில் கூரையின் இருந்த தகரம் கழன்று வீதியில் இருந்து வீட்டிற்கு வரும் மின்சார வயரினை வெட்டியதையடுத்து தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்குதலுக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதனையடுத்து 1919 அவசர அம்புலன் சேவைக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் சென்று பரிசோதித்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்து காயமடைந்த 25 வயதுடைய இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்

இதேவேளை உயிரிழந்த இருவரையம் முச்சக்கரவண்டி ஒன்றி வீட்டின் உரிமையாளர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்ததாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொல்பொருள் அமைச்சர் விதுர விக்கிரம அவர்கள் பதவி விலக வேண்டும்! : இரா.சாணக்கியன் எம்.பி!!



தொல் பொருள் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க அவர்கள் பணிபாளரை தவறான பாதையில் நடாத்தியவரும் ஆதரவாக தொல் பொருள் செயலணியில் பின் இருந்து நிதி வழங்கி இராணுவ தளபதி களை கொண்டு செயற்பட மூல காரணமானவர் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கா எனவே அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து விலக்கவேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு ஊடக மையத்தில் நேற்று புதன் கிழமை (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்கள் என்ற பெயரிலே நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். காலையில் கிரான், மாலையில் பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் இந்த கூட்டங்களில் அதிகாரிகள் பலர் கலந்து கொள்ளவில்லை அபிவிருத்தி என்ற பெயரிலே கடந்த 3 வருடங்களாக இந்த மாவட்டத்திலே எந்தவொரு வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

நடக்கின்ற கூட்டங்களில் அதிகாரிகளை அச்சுறுத்துவதும் தங்களது நிகழ்சி நிரலுக்குள் வராத அதிகாரிகளை மோசமான வார்த்தைகளால் பேசுவது தான் மாவட்டத்தில் சில வருடங்களாக நடக்கின்றது. அதேவேளை பேசப்படும் ஒரே விடையத்தை மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்கின்றோம். எதிர்கால தீர்வை பாராளுமன்ற உறுப்பினரான நான் முன்வைத்தாலும் இதனை நடை முறைப்படுத்துவதற்கு எங்களுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

இருந்த போதும் கல்வி தொடர்பாக ஆசிரியர் பற்றாக்குறை சில வலையங்களில் அதிகமான ஆசிரியர் இருக்கின்றமை சில வலயங்களில் இல்லை போன்ற பிரச்சனைகள் இருக்கின்றது. இவ்வாறு மாவட்டத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளை நடை முறைப்படுத்துவதற்காக இருக்கும் பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர்கள் இவ்வாறான விடயங்கள் பற்றி எந்த அக்கறையும் செலுத்தாமல் தீர்வை வழங்க வேண்டியவர்கள் கூட்டத்தில் மௌனமாக இருந்து கொண்டு அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டு அமைச்சு பதவிகள் பெற்று சலுகைகளை மட்டும் அனுபவித்துக் கொண்டு தீர்வுகளை காண்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான் முன்வைக்க வேண்டியுள்ளது.

நாங்கள் இந்த கூட்டங்களுக்கு போகாதுவிட்டால் இந்த மாவட்டத்தின் அனைத்து வழங்களையும் சூறையாடி பாலைவனமாக மாறியிருக்கும் எனவே பாதுகாவலராக கூட்டத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

திகிலிவெட்டை ஆலயத்துக்கான வீதியை கொண்டுவருவது தொடர்பாக பேசிய போது குறுகிய இலாபத்துக்காக அதற்கான ஒதுக்கீடு வழங்கப்படவில்லை குறிப்பாக வன பரிபாலன அதிகாரிகள் அபிவிருத்தி குழு கூட்டத்தில் பங்கு கொள்வதில்லை.

ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தையில் காணி தொடர்பாக தொடர்ச்சியாக பேசிவருகின்றோம் அதில் வன பரிபாலன திணைக்கள் 1985 ம் ஆண்டு வரைபடத்திற்கு சென்றால் வடகிழக்கிலுள்ள வன பரிபாலன திணைக்களத்தின் கீழ் உள்ள காணி பிரச்சனைக்கு முடிவு வரும். இதேவேளை குடும்பிமலையில் தொல்பொருளால் கட்டிடம் கட்டுவதை நிறுத்துமாறு தெரிவித்தபோதும் அவர் கூட்டத்திற்கு வருவதில்லை.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கூட்டத்தில் தொல்பொருள் பணிப்பாளர் முல்லைத்தீவு மாவட்டத்தில்டிதால் பொருளுக்காக ஒதுக்கிய காணியை விடுவிப்பதற்கு தான் பின்வாங்கி அனுப்பமுடியாது என தெரிவித்தபோது ஜனாதிபதி இராஜநாமா கடிதத்தை தருமாறு வாங்கியிருந்தார்.

எனவே இவை அனைத்துக்கும் பொறுப்பான அமைச்சர் விதுர விக்கரம நாயக்க அவர் பணிபாளரை தவறான பாதையில் நடாத்தியவரும் அவருக்கு ஆதரவாக செயற்பட்ட அமைச்சர் விதுர விக்கரம நாயக்கவை இந்த கூட்டத்துக்கு அழைத்து கேட்கும் கேள்வி.

குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைப்பதற்கு இராணுவத்துடன் சேர்ந்து விதுர விக்கரம நாயக்கதான் முக்கியமாக செயற்பட்டவர் அவ்வாறே மட்டக்களப்பில் குசனார் மலைக்கு அவர் வந்தபோது பாரிய எதிர்ப்பு தெரிவித்து விரட்டியடித்தோம்.

எனவே ஜனாதிபதி ஏன் விக்கரம நாயக்கவை இதுவரைக்கும் கண்டிக்க வில்லை உண்மையில் அமைச்சர் விக்கரம நாயக்கவை பதவில் இருந்து விலக்கவேண்டும். ஜனாதிபதி வெறுமனவே பணிப்பாளரை நீக்குவதற்கு காரணம் என்ன ஜனாதிபதி தேர்தலில் தனக்கு எங்களுடைய ஆதரவை பெறவேண்டும் என்பதற்காக எடுக்கும் சில முயற்சி அவர் உண்மையிலே தீர்மானம் எடுக்க வேண்டுமாயின் விதுர விக்கிரம நாயக்காவை பதவில் இருந்து நீக்கி இருக்க வேண்டும்.

அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க செருப்பு போடமாட்டார் அதனால் ஒரு புண்ணியவானாக மாறமுடியாது சிவன் ஆலயத்தை உடைத்துவிட்டு அதில் புத்தர் சிலையை வைத்து கும்பிட்டால் கடவுளுக்கே பொறுக்காத விடையங்கள் எனவே தமிழ் மக்களுக்கு துரோகம் செய்து கொண்டு அவர்களது காணியை பறிக்கும் ஒரு குற்றங்கள் அதாவது கடவுளுக்கே பொறுக்காத விடையம் எனவே இதனை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME
தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்ப்பீடன முன்னாய்வு மீளாய்வுக் கூட்டம்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பஸால் அவர்களினால் நிர்ப்பீடனம் தொடர்பான முன்னாய்வு மீளாய்வு கூட்டம் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த மீளாய்வில் கல்முனை சுகாதார பிராந்தியத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களும் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்களும் பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன் சுகாதார வைத்திய அதிகாரிகள் நிர்ப்பீடனம் தொடர்பில் தத்தமது பிரதேச முன்னேற்ற அறிக்கைகளை முன்வைத்து விளக்கக்காட்சி தொகு ப்புரைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வின் போது தொற்று நோய்களை திறம்பட எதிர்த்துப்போராடவும் குழந்தைகள் மற்றும் தாய்மாரின் நிர்ப்பீடன சக்தியை அதிகரிப்பதற்குமான ஆலோசனையிலும் பங்குபற்றுனர்கள் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் போது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 05 மடிக்கணினிகள் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

# கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளர் ஏ.பி.மதன் கடமையேற்பு



கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளராக ஆளுநர் செந்தில் தொண்டமானினால் நியமிக்கப்பட்ட ஏ.பி.மதன் தனது கடமைகளை திருகோணமலை காரியாலயத்தில் (14) பொறுப்பேற்றுக்கொண்டார்.

## வவுனியா பழைய பேருந்து நிலையம் வரை உள்ளூர் சேவைகள்!!

# கலந்துரையாடலில் தீர்மானம்!!



வவுனியாவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பேருந்துகள் பழைய பேருந்து நிலையம் வரை சென்று ஐந்துநிமிடங்கள் தரித்து நின்று சேவையில் ஈடுபட வேண்டும் என தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரத்தில் உள்ள சில முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பழைய பேருந்து நிலையம்வரை உள்ளூர் பேருந்துசேவைகளை நடாத்துவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு வர்த்தகர்சங்கத்தினரால் கோரிக்கைவிடுக்கப்பட்டது.

குறிப்பாக அந்தபகுதியில் அதிகளவான வியாபாரநிலையங்கள் இருப்பதால் பொதுமக்கள் அங்கு வந்துசெல்வதில் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே குறித்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக அரச,தனியார் பேருந்து தரப்பினரிடமும் கருத்துக்கள் கோரப்பட்டது.இதன்போது பழைய பேருந்து நிலையப்பகுதிக்குள் சேவையில் ஈடுபடுவதில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நடைமுறையை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக வடமாகாண ஆளுனர் மற்றும் பிரதமசெயலாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தி மேலதிக நடவடிக்கையை முன்னெடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் அதிகளவான கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக முதலாவது கிலோமீற்றருக்கு 120 ரூபாயும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாயும் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர், தற்போது வவுனியாவில் முதலாவது கிலோமீற்றருக்கு 150 ரூபாயும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாயும் அறவிடுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட அதிகமாக கட்டணம் அறவிடப்பட்டால் குறித்த முச்சக்கரவண்டிகள் தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தினால் அது தொடர்பாக நாம் விசாரணை செய்து உரிய நடவடிக்கையினை எடுப்போம்.

அத்துடன் எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்து காணப்படுவதால் முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுவருகின்றனர். எனினும் கட்டணத்தை குறைப்பது தொடர்பாக எமது சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்திற்கு வருவதாக தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் அரச அதிபர் பி.ஏ. சரத்சந்திர,அபிவிருத்திக்குழு தலைவர் கு.திலீபன், மாநகரசபை செயலாளர், உதவி பிரதேச செயலாளர், வர்த்தகர்சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், நடைபாதை வியாபாரிகள் சங்கம், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு :

## குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக 5 பேர் கைது



வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக நேற்று (14.06.2023) காலை 05 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக வரிசையில் பணிக்கு ஊழியர்களை அமர்த்தி, வரிசையினை பெற்றுக் கொடுப்பதற்கு 5000 ரூபாவும், வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க 25000 ரூபாவும் இடைத் தரகர்களினால் பெறப்படுவதாக பொதுமக்களிடமிருந்து பல விமர்சனங்கள் வெளியாகியிருந்த நிலையில்,

கடந்த (30.05.2023) இரவு தமது தேவைக்கு அல்லாது குறித்த பகுதியில் பணத்திற்காக வரிசையில் நின்றோர், சந்தேகத்திற்கிடமான முறையில் குறித்த காரியாலயம் முன்பாக ஒன்று கூடி நின்றோர் என 10 நபர்களை கைது செய்திருந்தனர்.

எனினும் குறித்த செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக மேலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் நேற்று (14.06.2023) காலை முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 5 நபர்களை பொலிஸார் கைது செய்தமையுடன் அவர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆயர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## 566 கிலோ மீட்டர் தூரத்தை மூன்று நாட்களில் செல்லவுள்ள

# இரட்டையர்கள் வவுனியாவை வந்தடைந்தனர்!



பொகவந்தலாவை - கொட்டியாக்கலை தோட்டத்தை சேர்ந்த இரட்டையர்கள் நேற்று (14.06.2023) அதிகாலை 4.00 மணியளவில் தமது சாதனை பயணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்து 9 மணித்தியாலங்களில் மதியம் 01.00 மணியளவில் வவுனியா நகரை வந்தடைந்து தொடர்ச்சியாக பயணித்தினை தொடர்ந்தனர்.

இரட்டையர்களான ஆர்.ஏ.விக்னேஷ்வரன் மற்றும் தயாபரன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் தொடக்கம் காலி வரை 566 கிலோ மீட்டர் தூரத்தை மூன்று நாட்களில் ஓய்வு எடுக்காமல் நடந்து உலக சாதனை படைக்கவுள்ளனர்.

இதேவேளை இதற்கு முன்னர் இவர்கள் யாழில் இருந்து காலி வரையிலான 566 கிலோமீட்டர் தூரத்தை நான்கு நாட்கள் நடந்தும் , புத்தளத்தில் இருந்து சீதுவை வரையிலான 147 கிலோமீட்டர் தூரத்தினை வெறுமனே ஆறு மணி நேரத்திலும் பயணித்து சாதனை படைத்துள்ளதுடன், கொழும்பில் இருந்து பொகவந்தலாவை வரையிலான 184 கிலோமீட்டர் தூரத்தை 18.5 மணித்தியாலங்களில் நடந்து சாதனை படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS



அ.கிருபாகரன்
-அதிபர்-

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubaleamers@gmail.com
www.kirubaleamers.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

## வெளிவரும்

**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் THESIYAM NEWS

**NEWSPAPER SIZES, RATE PER EDITION**

**WEEKLY NEWSPAPER**

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com

**CREATIVE DESIGNER**
every design has a story

Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers

+94 77 3828 594

ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS

BIG SALE! BIG SAVINGS

**மங்களா காட்சியறை**

Mangala

யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.

No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

TEL : 021 222 8367 | +94 777 286 069




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.